**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/s. ULTRA MINES PRIVATE LIMITED, S.F.NO'S.133/1 (PART), 133/2, 133/4, 134/1 & 134/2, LEASE OVER AN EXTENT OF 4.40.0 HA, VENKATESAPURAM VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 13.11.2024 AT 11.30 AM AT M/s. P.V.R – L.M.R KALYANA MANTAPAM, NO. 344/1, 344/2, BERIKAI VILLAGE, THEERTHAM ROAD, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt.R.A.Priyanka I.A.S | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. A. Jothi Prakash | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. Karthi | : | The Partner,<br>M/s. Ultra Mines Private Limited |
| 5 | Thiru.P.Gopinath | : | EIA Consultant,<br>M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 66 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed M/s. Ultra Mines Private Limited Rough stone and Gravel Quarry, Lease over an Extent of 4.40.0 Ha Located at S.F.Nos.133/1 (Part), 133/2, 133/4, 134/1 & 134/2,

lease over an extent of 4.40.0 Ha, Venkatesapuram Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 10.10.2024 and bit notices regarding public hearing was issued to the public of Venkatesapuram Village, Kutalapalli Village and Menasandhoddi Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed Rough stone and Gravel Quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.P.Gopinath, EIA Consultant, M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai of the proposed Rough stone and Gravel Quarry project has made presentation about the proposed Rough stone and Gravel Quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough stone and Gravel Quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Navin, Venkateshapuram Village:**

Thiru. Navin has said that there is no problem for establishing the quarry project and added that the quarry management should carry out the blasting activity without dust emanation, loaded lorries should be covered with tarpaulin properly, to drive the lorries with limited speed, the fallen gravel stones in the village roads be removed. He requested to give employment opportunities to the local youths in this quarry and to give compensation if nearby farmers suffered losses due to blasting the quarry.

2. **Thiru. Srinivasan, Venkateshapuram Village:**

Thiru. Srinivasan has said that the movement of loaded lorries generates dust on the roads, and gravel stones are also fall onto the road when the trucks pass over speed breakers which affecting two-wheeler riders. Hence, the gravel be removed from the roads at regular intervals. Also, requested to plant and maintain the plantation near the local school.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, no petition was received on the proposed M/s. Ultra Mines Private Limited Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, from the public on the proposed rough stone and Gravel Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed

25/11/24 25/11/2024. 01/12/24

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

25/11/24

**Sub Collector**
**Hosur**

T/7

**District Collector**
**Krishnagiri**

T/7

**தி/ள். அல்ட்ரா மைன்ஸ் பிரைவேட் லிமிடெட், சர்வே. எண். 133/1 (பகுதி), 133/2, 133/4, 134/1 & 134/2, வெங்கடேசபுரம் கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி –4.40.0 ஹெக்டேர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 13.11.2024 அன்று எண். 344/1, 344/2, தீர்த்தம் மெயின் ரோடு, பேரிகை கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். பிவிஆர் & எல்எம்ஆர் கல்யாண மண்டபம் – இல் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.A.பிரியங்கா இ.ஆ.ப., | : | சார் ஆட்சியர், ஓசூர்<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.A.ஜோதி பிரகாஷ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு. கார்த்தி | : | பங்குதாரர்<br>திரு/ள். அல்ட்ரா மைன்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 5 | திரு. P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>திரு/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 66 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு/ள். அல்ட்ரா மைன்ஸ் பிரைவேட் லிமிடெட், ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் திரு/ள். அல்ட்ரா மைன்ஸ் பிரைவேட் லிமிடெட், ரப் ஸ்டோன் மற்றும் கிராவல்

குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 10.10.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், வெங்கடேசபுரம் கிராமம், குட்டலப்பள்ளி கிராமம், மெனசனதொட்டி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். அல்ட்ரா மைன்ஸ் பிரைவேட் லிமிடெட் திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு/ள். அல்ட்ரா மைன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. P. கோபிநாத், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. நவீன், வெங்கடேசபுரம் கிராமம்:**

திரு. நவீன் அவர்கள், இங்கு குவாரி துவங்க எவ்வித பிரச்சனையும் இல்லை என்று கூறினார். குவாரியில் தூசு எழும்பா வண்ணம் வெடி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். கனரக வாகனங்கள் கற்களை ஏற்றிச் செல்லும் பொழுது (LOAD) முழுவதும் தார்பாலின் மூலம் மூடி எடுத்துச் செல்லுமாறும், வேகத்தை குறைத்து இயக்குமாறும் கேட்டுக் கொண்டார். கனரக வாகனங்கள் ஊருக்குள் செல்லும் பொழுது ஜல்லி கற்கள் சிதறி சாலையில் விழுகின்றனர். அவற்றை முறையாக அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். உள்ளூரில், படித்த இளைஞர்களுக்கு குவாரியில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்

கொண்டார். குவாரியில் வெடி வைக்கும் பொழுது அருகிலுள்ள விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டால் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று கேட்டுக கொண்டார்.

2. **திரு. சீனிவாசன், வெங்கடேசபுரம் கிராமம்:**

திரு. சீனிவாசன் அவர்கள், கனரக வாகனங்கள் கற்களை ஏற்றிச் செல்லும் பொழுது (LOAD) அதிகளவில் தூசு ஏற்படுகிறது மற்றும் ஜல்லி கற்கள் சாலைகளில் விழுவதால், இரு சக்கர வாகன ஓட்டிகள் வேகத்தடை (SPEED BREAKER) அருகில் வரும் பொழுது பாதிப்படைகின்றனர். எனவே, சாலையில் ஜல்லி கற்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் அப்புறப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். மேலும், உள்ளூரிலுள்ள பள்ளி அருகே செடிகளை நட்டு பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். அல்ட்ரா மைன்ஸ் பிரைவேட் லிமிடெட் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேலும், தி/ள். அல்ட்ரா மைன்ஸ் பிரைவேட் லிமிடெட் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல்

பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
ஓசூர்

சார் ஆட்சியர்
ஓசூர்

மாவட்ட ஆட்சியர்
கிருஷ்ணகிரி